# ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கம் ஊரெங்கும் தொடக்கம்; உற்சாக வெள்ளத்தில் தமிழ் மக்கள்!





கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பின் கீழ், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீர்சாகிப்பேட்டை பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.7.2025) வீடு, வீடாகச் சென்று திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி, உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பொதுக்குழு உறுப்பினர் திருமதி.வே.கமலா செழியன், திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், வட்ட செயலாளர் க.வே.மோகன் உள்பட நிர்வாகிகள், இளைஞரணியினர் கலந்து கொண்டனர்.




”ஓரணியில் தமிழ்நாடுகழக உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தின் கீழ் ஆலந்தூர் வடக்கு பகுதி, 161–வது வட்டம், பூத் எண்280, ராஜா தெருவில் கழகப் பொருளாளர் – கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் APP மூலம் கழக உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அருகில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், வட்டச் செயலாளர் எம்.ஆர்.சீனிவாசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.




”ஓரணியில் தமிழ்நாடுகழக உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தின் கீழ் ஆலந்தூர் தெற்கு பகுதி, 164–வது வட்டம், பூத் எண்–342, ராஜா தெருவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் APP மூலம் கழக உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், வட்டச் செயலாளர்கள் ஜெ.நடராஜன், கே. ஆர்.ஜெகதீஸ்வரன், ஏசுதாஸ், மாமன்ற உறுப்பினர் தேவி ஏசுதாஸ் ஆகியோர் உள்ளனர்.




சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76வது வட்டம் செல்லப்பா தெருவில் நேற்று (3.7.2025) சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தான் வசிக்கும் 94–வது பாகத்தில் வீடு வீடாக சென்று கழக உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். இதில் வட இந்திய பெருமக்கள் ஆர்வத்தோடு கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அப்பணியில் திரு.வி.க. நகர் 76–வது வட்ட கழக செயலாளர் எஸ்.சசிக்குமார், மாமன்ற உறுப்பினர் எஸ். தமிழ்ச்செல்வி, இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் ஸ்ரீதர் ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட முடிவைத்தானேந்தல் ஊராட்சியில் “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தொடக்கி வைத்து, வீடு வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் குறித்து எடுத்துரைத்து, தி.மு.க.வில் இணையுமாறு அழைப்பு விடுத்தார். இந்த நிகழ்வில், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



முதலமைச்சரும், கழக தலைவருமான, மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி ஈரோடு வடக்கு மாவட்டம் தாளவாடி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கழகத் துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா வீடு வீடாகச் சென்று ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் கழகத்திற்கு உறுப்பினர்களை சேர்த்தார். நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஒன்றிய கழகச் செயலாளர், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




”ஓரணியில் தமிழ்நாடுகழக உறுப்பினர் சேர்க்கும் திட்டத்தின் கீழ் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், அய்யப்பன்தாங்கல் ஊராட்சி, பாகம் எண் – 8, தெருவீதியம்மன் கோயில் தெருவில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் படிவம் மற்றும் மக்களுடன் ஸ்டாலின் APP மூலம் கழக உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஆலந்தூர் தொகுதி மேற்பார்வையாளர் பத்மப்ரியா ஆகியோர் உள்ளனர்.